DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: STC.No.49/2025**

Deposition of witness for Prosecution அ.சா.1

Name : செல்வம்
Father/ Husband Name : மச்சக்காளை
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 24.11.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக வேலை பார்க்கிறேன். கடந்த 26.01.2025-ம் தேதி நானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமச்சந்திரனும் கண்ணன்குடி பொன்னாத்தாள் கோவில் அருகில் இரவு 07.00 மணியளவில் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது கண்ணன்குடியிலிருந்து கருர் பக்கமாக அர்ச்சுணன் என்பவர் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார். அவர் ஓட்டிவரும் போது தள்ளாடிக் கொண்டு ஓட்டிவந்தார். நாங்கள் இருவரும் அவரை மறித்து சோதனை செய்து பார்க்கும் போது அவர் மீது மதுவாடை வீசியது. பிறகு தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து மருத்துவ பரிசோதனைக்கு மருத்துவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தோம். ஆனால் எதிரி மருத்துவ பரிசோதனைக்கு உட்பட மறுத்துவிட்டார். பின்னர் காவல் நிலையம் கொண்டு வந்து சிறப்பு சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். நான் உதவியாக இருந்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் தற்போதுவரை அதே காவல்நிலையத்தில் தான் பணிபுரிந்து வருகிறேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் குடியரசு தின நாள் என்றால் சரிதான். மேற்படி நாளில் மதுவிற்பனைக்கு தடை உள்ளது என்றால் சரிதான். வாகன தணிக்கையில் நாங்கள் எவ்வளவு நேரம் ஈடுபட்டோம்

என்றால் இரவு 07.00-09.30 மணிவரை இருந்தோம். எதிரியை எத்தனை மணிக்கு வாகன தணிக்கை செய்தோம் என்றால் இரவு 09.30 மணிக்கு செய்தோம். எதை வைத்து மது அருந்தியிருந்தார் என்று கண்டுபிடித்தோம் என்றால் அவரிடம் மதுவாடை வந்தது, தள்ளாடிக்கொண்டும் வந்தார். வாகன தணிக்கையின் போது பாக்கெட் கேமரா பயன்படுத்தினோமா என்றால் இல்லை. வாகன தணிக்கையின் போது Breath analyser கருவி அன்று எங்கள் கையில் இல்லை. எதிரியை எத்தனை மணிக்கு தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றால் இரவு 10.00 மணி. மருத்துவமனையில் மருத்துவர் சோதித்த போது எதிரி மது அருந்தியிருக்கிறேன் என்று சொல்லி இரத்தப்பரிசோதனை வேண்டாம் என்று கையெழுத்து போட்டு கொடுத்தார். நான் கையெழுத்து போடச் சொல்லி எதிரியை வற்புறுத்தவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று இரவு 07.00-09.30 மணிவரை மது அருந்திவிட்டு வந்து வாகனம் ஓட்டியதாக எத்தனை வழக்குகள் தாக்கல் செய்தோம் என்றால் இந்த ஒரு வழக்கு தான்.

2. எதிரியை அவருடைய உறவினரை வரவைத்து அவருடன் இருசக்கர வாகனத்தில் அனுப்பிவைத்தோம். மேற்படி எதிரியின் இருசக்கர வாகனத்தை காவல் நிலையம் கொண்டு செல்லவில்லையா என்றால் மருத்துவமனைக்கு கொண்டுவந்து இறக்கிவிட்டுவிட்டு வாகனத்தை காவல்நிலையம் எடுத்து சென்றோம். வண்டியை தவிர்த்து எதிரியிடமிருந்து வேறு எந்த பொருளையும் வாங்கவில்லை. வண்டியை எப்போது ஒப்படைத்தேன் என்றால் அன்று இரவு எதிரியின் உறவினரை வரவைத்து அவரிடம் கொடுத்துவிட்டோம். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நான் வாகன தணிக்கையில் இல்லை என்றும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமச்சந்திரன் எனக்கு போன் மூலம் தகவல் சொல்லியதன் அடிப்படையில் நான் காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடம் சென்று எதிரியை அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல. வாகனதணிக்கையில் யார் ஈடுபடவேண்டும் என்று நிர்ணயித்து எங்களுக்கு அலுவல் பட்டியல் கொடுப்பார்கள். வாகன தணிக்கையில் சம்பவத்தன்று எத்தனை பேர் என்னுடன் இருந்தார்கள் என்றால் நானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் மட்டும் தான் இருந்தோம். நிர்வாகத்தில் ஒருநாளைக்கு மதுஅருந்திவிட்டு வாகனம் ஓட்டியதாக எத்தனை வழக்குகள் தாக்கல் செய்யவேண்டும் என்ற இலக்கு எதுவும் உள்ளதா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் குற்றம்சாட்டப்பட்ட நபர் மீது பொய்யாக வழக்கு

தாக்கல் செய்யவேண்டும் என்று சோடித்து இந்த சலான் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: STC.No.49/2025**

Deposition of witness for Prosecution அ.சா.2

Name : ராமச்சந்திரன்
Father/ Husband Name : கருப்பையா
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 24.11.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது சென்னை மாநகர திருவான்மியூர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு தேவகோட்டை தாலுகா காவல்நிலையத்தில் பணிபுரிந்த போது 26.01.2025-ம் தேதி நானும் தலைமைக்காவலர் செல்வம் கண்ணன்குடி அருகே மாலை 07.00 மணியளவில் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சுமார் 09.30 மணியளவில் கண்ணன்குடியிலிருந்து கருர் நோக்கி சென்றவரை நிறுத்தி சோதனை செய்த போது அவர் தடுமாற்றத்துடன் இருந்தார். அவர் ஊதும்போது வாயில் மதுவாடை வந்தது. அவரை விசாரிக்கும் போது அவருடைய பெயர் அர்ச்சுணன் என்றும் தந்தையின் பெயர் நாராயணன் ஊர் வளையன்வயல் என்றும் சொன்னார். வாகனத்திற்கான ஆவணங்களை கேட்ட போது ஆவணங்கள் இல்லை என்று சொன்னார். பிறகு எதிரி மீது மதுஅருந்தி வாகனம் ஓட்டியதற்கும், ஆவணங்கள் இல்லாமல் வாகனம் ஓட்டியதற்கும் வழக்கு தாக்கல் செய்தேன். **(மேற்படி காவல்துறை அறிவிப்பு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பிறகு எதிரியை தேவகோட்டை அரசு மருத்துவமனை அழைத்து வந்து மருத்துவரிடம் மருத்துவ சான்று பெற்றேன். **(மேற்படி மருத்துவசான்று அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பிறகு எதிரியின் வாகனத்திற்கு ஆவணங்கள் இல்லாததால்

வண்டியை வாங்கி வைத்துவிட்டு அவருடைய உறவினருக்கு தகவல் சொல்லி வரவைத்து அவருடன் அனுப்பி வைத்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் 15.03.2025-வரை வேலை பார்த்தேன். சம்பவத்தன்று நாங்கள் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் இரவு 07.00 மணிக்கு வாகன தணிக்கைக்கு சென்றுவிட்டோம். எதிரி அர்ச்சுணனை தணிக்கை செய்த போது என்னுடன் யார் இருந்தார் என்றால் தலைமைக் காவலர் செல்வம் இருந்தார். சம்பவ இடத்திற்கும் எதிரியின் ஊருக்கும் சுமார் 5 கி.மீ தூரம் இருக்கும். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் தேதி குடியரசு தினம் என்றால் சரிதான். அன்று மதுவிற்பனை உண்டா என்றால் நான் எதிரியிடம் எவ்வாறு மதுவாங்கினார் என்று விசாரித்தேன், அதற்கு அவர் முந்தையநாள் வாங்கி வைத்திருந்து குடித்ததாக சொன்னார். வாகன தணிக்கையில் இருந்த போது நான் ஏன் வளையன்வயல் கிராமத்திற்கு சென்றேன் என்றால் நான் வளையன்வயல் கிராமத்திற்கு செல்லவில்லை. எதிரி வண்டியை ஓட்டிவந்தாரா என்றால் ஆமாம் ஓட்டி வந்தவரைதான் நிப்பாட்டினோம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று இரவு 07.00-09.30 மணிவரை மது அருந்திவிட்டு வந்து வாகனம் ஓட்டியதாக எத்தனை வழக்குகள் தாக்கல் செய்தோம் என்றால் இந்த ஒரு வழக்கு தான், இதர குற்றங்களுக்காகதான் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது. எதிரியிடம் ஆவணங்கள் கேட்ட போது எதிரி புதுவண்டி அதனால் ஆவணங்கள் இல்லை என்று சொன்னார். நான் ஆவணங்களை கொண்டுவந்து காண்பித்துவிட்டு வாகனத்தை எடுத்துச் செல்லுங்கள் என்று வாங்கிவைத்தேன். எதிரியிடமிருந்து அவருடைய வாகனத்திலிருந்த ரூ.26,500/- யை நான் எடுத்துச் சென்றேனே என்றால் சரியல்ல, நான் வாகனத்திலிருந்து எந்த பொருட்களையும் எடுக்கவில்லை. அ.சா.ஆ.1யை எப்போது எழுதுவோம் என்றால் சம்பவ இடத்திலேயே எழுதிவிடுவோம். சலான் கொடுத்துவிட்டு எதிரியை அவருடைய இருசக்கர வாகனத்தில் தலைமைக் காவலர் செல்வம் அழைத்து வந்தார். எங்களுக்கு அன்றுஅன்று காலை எந்த அலுவல் என்று சொல்வார்கள். சில நேரங்களில் அன்றைய அலுவல் எழுத்துபூர்வமாக கொடுக்கப்படும், சில நேரங்களில் வாய்மொழியாக சொல்வார்கள். எத்தனை மணிக்கு எதிரியை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றால் இரவு 10.30 மணிக்கு. குற்ற பத்திரிக்கையில் இரவு 10.30 மணிக்கு வாகன தணிக்கையை முடித்ததாக கொடுத்துள்ளேன் என்றால் நேரம் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது, 09.30

மணிக்கு வாகன தணிக்கை முடித்துவிட்டோம். மருத்துவமனையில் எதிரி குடிபோதையில் இருக்கிறாரா என்று பரிசோதித்து கொடுக்குமாறு மெமோ கொடுத்தேன். அ.சா.ஆ.2ல் எதிரி குடித்திருந்ததாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் குடிபோதை வாடை இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. எதிரி குடித்தது உண்மைதான், இரத்த மற்றும் சிறுநீர் பரிசோதனை வேண்டாம் என்று எழுதிக் கொடுத்ததால் பரிசோதனை மேற்கொள்ளவில்லை. எதிரி அ.சா.ஆ.2ல் தான் குடித்து இருப்பதாக எழுதியுள்ளாரா என்றால் இல்லை. பிறகு வாகனத்தை காவல்நிலையம் கொண்டு சென்றுவிட்டோம். பிறகு வாகனத்தை நீதிமன்ற உத்தரவுப்படி கொடுத்ததாக தலைமைக் காவலர் சொன்னார். ஆவணங்கள் இருந்தால் மதுகுடித்துவிட்டு வாகனம் ஓட்டியதாக பிடிக்கும் வாகனங்களை அவர்களிடம் கொடுத்துவிடுவோம். நான் வளையன்வயல் கிராமத்திற்கு இரவு 08.00 மணிக்கு சென்றுவிட்டேன் என்றும் எனக்கும் எதிரிக்கும் ஏற்கனவே இருந்த பகையை மனதில் வைத்து எதிரியின் வண்டியிலிருந்த ரூ.26,500/- பணத்தை எடுத்து பிரச்சனை செய்தேன் என்றும் பணத்தை திருப்பி கேட்டதால் டி.டி கேஸ் போட்டுவிடுவேன் என்று மிரட்டி 1 மணிநேர வாக்குவாதத்திற்கு பிறகு எதிரி பணத்தை தொடர்ந்து கேட்டதால் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.